**எஸ்,டி.சி.எண். 2635/2023 நாள்- 12.04.2024 பக்கம்.120/2023**

**ம.சா.1. சம்பூரணம் , த/பெ.பாலசுப்பிரமணி**

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் விவசாயம் உள்ளது. நான் வீட்டுக்குடித்தனம் இருந்து வருகிறேன் என்றால் விவசாயமும் செய்து வருகிறேன். எந்த கிராமத்தில் சர்வே எண். எவ்வளவு நிலம் என்றால் தோட்டக்குறிச்சி ஐயம்பாளையத்தில் 3 ஏக்கர் விவசாய நிலமும், அதில் தென்னை மரங்களும் உள்ளன. சர்வே எண். எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவர் எனக்கு கொடுத்த நிலம் என்றால் இல்லை எனது பெற்றோர் வீட்டில் சீதனமாக கொடுத்த நிலம் ஆகும். மேற்படி நிலமானது எனது பெற்றோர் எனக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள். எந்த வருடம் கொடுத்தார்கள் என்றால் சுமார் 25 ஆண்டுகள் இருக்கும்.

2) கிரயம் செய்து கொடுத்த அசல் ஆவணம் என் வசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு சிட்டா, அடங்கல் என்ன என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அடங்கல் என்பது ஒரு நிலத்தில் என்ன பயிரிடுகிறோமோ அது பற்றியது ஆகும். எனது பெற்றோரால் கொடுக்கப்பட்ட கிரயத்தின் பெயரில் வந்த சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு தோட்டக்குறிச்சி கிராமத்தில் பாத்தியப்பட்ட நிலம் எதுவும் இல்லை என்றாலும், எனது பெற்றோர் எவ்வித கிரயமும் எனக்கு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) எனக்கு எந்தெந்த வகையில் வருமானம் வருகிறது என்றால் விவசாயம் மற்றும் தென்னை மரங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் எனக்கு வருமானம் வருகிறது. மேலும், எனது கணவர் டவுன் பஞ்சாயத்தில் E.O. ஆக இருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறார். எனக்கு என்று தனி வருமானம் ஏதேனும் உள்ளதா என்றால் விவசாயமும், தென்னை மரம் குத்தகையும் தான். எதிரிகளை எனக்கு எப்படி தெரியும் என்றால் 2-ம் எதிரி ரவி என்னுடைய வீட்டின் வழியாக வரப்போக பழக்கம், அதன் மூலம் தெரியும். 3-ம் எதிரி கருணாநிதியை எனக்கு தெரியாது என்றால் என்னிடம் பணம் வாங்குவதற்கு ரவியும், கருணாநிதியும்தான் வந்தார்கள். ரவியை எனக்கு எத்தனை ஆண்டுகளாகத் தெரியும் என்றால் 2018-ம் ஆண்டிலிருந்து பணம் கொடுத்ததற்கு முன்பு ஒரு வருடமாகத் தெரியும். பணம் கொடுப்பதற்கு முன்பு

எனக்கு எதிரியை தெரியாது என்றால்தெரியும், எனது வீட்டின் வழியாக வரப்போக பழக்கம்.

4) 2008 ம் ஆண்டு வாக்கில் ஆஜர் எதிரிகள் ரவி, கருணாநிதியை எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பாலசுப்பிரமணி என்பவர் எனது கணவர் என்றால் சரிதான். பி.சேகர் என்பவர் எனது மகன் என்றால் சரிதான். சாந்தகுமாரி எனது மருமகள் என்றால் சரிதான். தளவாபாளையத்தை சேர்ந்த ஜெகநாதன் யார் என்றால் எனக்குத் தெரியாது. ஜெகநாதனின் மனைவி விஜயலட்சுமி, அவரது மகள் சத்தியப்பிரியா ஆகியோரையும் எனக்குத் தெரியாது என்றால் தெரியாது.

5) 2008-ம் வருடம் பி.சேகர்,எனது சின்ன மருமகள் வசந்தகுமாரி , எனது கணவர் பாலசுப்பிரமணி, நான் ஆகிய அனைவரும் 23.06.2008-ம் ஆண்டில் கே.ஆ.ர்.சி.இன்வெஸ்ட்மெண்டில் டெப்பாசிட் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1.50/- வட்டி என்றால் சரிதான். மேற்படி தொகைக்கு 2020 லிருந்து வட்டி செலுத்தவில்லை. எனது கணவர் என்ன என்ன தொழில்செய்து வருகிறார் என்றால் அவர் அரசாங்க உத்யோகம் பார்த்து வந்ததால் வேறு தொழில் எதுவும் செய்யவில்லை. அரசுப்பணியில் இருந்து எனது கணவர் எந்த ஆண்டு ஓய்வு பெற்றார் என்றால் ஞாபகம் இல்லை.

6) நானோ, எனது கணவர் பாலசுப்பிரமணியோ எந்தவிதமான பதிவு செய்யப்பட்ட கூட்டாண்மை நிறுவனம் நடத்தி வந்தோமா என்றால் இல்லை. ஜி.ஆர். மண்டபம் அருகில் உள்ள வர்ஷா டவரில் நானோ அல்லது எனது கணவரோ நிறுவனம் நடத்தி வந்தோமா என்றால் எனது கணவர் ஓய்வு பெற்றதற்கு பின்னிட்டு பைனான்ஸ் செய்து வந்தார். அந்த பைனான்ஸ் கம்பெனி யார் பெயரில் இருந்தது என்றால் என்னுடைய பேரன், பேத்தி மற்றும் எனது பெயரில் இருந்தது. அந்த நிறுவனத்தின் பெயர் அருண் ஷோனா பைனான்ஸ் ஆகும். அந்த நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் அனைத்தும் எனது கணவர்தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு அந்த நிறுவனத்தை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

7) நாங்கள் பைனான்ஸ் வைத்து நடத்தி வருவதால் ஒரு பைனான்சின்

நடைமுறைகள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள நிறுவனத்தை பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த நிறுவனத்தின் முழு அலுவலக முகவரி கே.ஆர்.சி.பைனான்ஸ், பாரதி நகர், சின்னாண்டான்கோவில் ஆகும். கதவு எண் எனக்குத் தெரியாது. மேற்படி நிறுவனம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, அதில் யார் யார் பங்குதாரர்கள் என்றால், ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எனக்குத் தெரியாது, ஆனால் இருவரும் பங்குதாரர்கள். இருவரை தவிர எக்காலத்தில் யாரும் பங்குதாரர்கள் இல்லை என்றால், நான் பணம் கொடுத்த காலத்திலிருந்து தெரியும்.

8) இந்த வழக்கிற்கு முன்பு அறிவிக்கப்பட்ட சட்ட அறிவிப்பை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் கொடுத்த பிரமாணப்பத்திரிக்கை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன என்ன சங்கதிகள் உள்ளன என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனது புகாரில் எந்த ஒரு இடத்திலும் 1 ம் எதிரி நிறுவனம் பதிவு செய்யப்பட்ட கூட்டாண்மை நிறுவனம் என்றும், 2,3 எதிரிகள் அதில் பங்குதாரர்கள் என்றும் குறிப்பிடவில்லை என்றால் எனக்குத் தெரிந்தால்தான் சொல்ல முடியும். இருவரும் பார்ட்னர்கள் என்று சொன்னதன் பேரில் தெரியும்.

9) அவர்கள் பங்குதாரர்கள் என்பது குறித்து நான் எந்தவிதமான ஆவணத்தையும் பார்வையிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் எந்த ஒரு இடத்திலும் நான் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கரூர்மாவட்டம், பசுபதிபாளையம் அஞ்சல், ராமானுாரைச் சேர்ந்த கதவு எண்.78/4, ல் வசிக்கும் ராஜேந்திரனை எனக்கு யார் என்று தெரியாது என்றால் தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் அவர் போலீசாக இருந்ததால் தெரியும். அவர் ஓய்வு பெற்றதற்கு பின்னிட்டு எனது கணவருடன் வசூலுக்கு சென்று வருவதால் பழக்கம்.

10) கோகுலகிருஷ்ணன் என்பவரை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடங்களாகத் தெரியும் என்றால் 5 வருடமாகத் தெரியும். அவருக்கும், எனது கணவருக்கும் எப்படி பழக்கம் என்றால், எனது பக்கத்து வீட்டில் குடியிருந்தார் அதனால் பழக்கம் ஆவார். திருமலைராஜன் என்பவரை

எனக்குத் தெரியாது என்றால்தெரியும். அவர் யாரிடம் வேலை செய்தார் என்றால் எங்களுடைய பைனான்சில் வேலைசெய்தார், தற்போது இல்லை. எத்தனை வருடங்களாக எனது கணவர் நடத்தி வந்த பைனான்சில் வேலை செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. பல வருடங்களாக வேலை செய்து வந்தார். கே.ஆர்.இன்வெஸ்ட்மெண்டுக்கும், எங்களுக்கும் எப்போது பிரச்சனை வந்தது என்றால் பிரச்சனை எல்லாம் எதுவும் கிடையாது, பணம் கேட்டு போன் செய்தோம். எந்த பதிலும் இல்லை, அதனால் நேரடியாக நாங்கள் பணம் வசூலுக்காக சென்றோம் அப்போது காசோலை கொடுத்து ஒரு மாதம் கழித்து வசூலுக்கு போடும்படி சொன்னார்.

11) காசோலை கொடுத்ததாக சொல்லும் தேதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையில் என்ன என்ன வாசகங்கள் இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது பேரன் வி.பி.என்.சரண்குமார் இல்லை என்றால் அவரையும்தான் அழைத்து சென்றோம், அவருக்கும் எதிரிகள் 7 லட்சம் கொடுக்கவேண்டும்.

12) எனது பேரனின் வயது தற்போது என்ன என்றால் 26 ஆகும். அவர் சுமார் எத்தனை வருடங்களுக்கு முன்பு எனது பேரன் கல்லூரிப்படிப்பை முடித்தார் என்றால் கோயம்புத்தூரில் உள்ள குமரகுரு கல்லூரியில் 3 ஆண்டுகளுக்கு முன்பு படிப்பை முடித்தார். தற்போது அவர் வீட்டில் இருந்து வருகிறார் என்றால் இல்லை பிசினஸ் செய்து வருகிறார். என்ன பிசினஸ் என்றால் துணி ஆர்டர் எடுத்து திருப்பூரில் பிசினஸ் செய்து வருகிறார். கல்லூரிப்படிப்பை முடித்துவிட்டு ஒரு வருடம் ட்ரெய்னிங் சென்றுவிட்டு பிசினஸ் செய்தார்.

13) எனது பேரன் சரண்குமார் எங்களுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது பேரனின் தந்தையான எனது மகன் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர்தான் எனது பேரனை படிக்க வைத்தார் என்றால் சரிதான். எனது பேரன் எங்கு பள்ளி படிப்பை முடித்தார் என்றால் புலியூர் செட்டிநாடு பள்ளியிலும், நாமக்கல் கிரீன் பார்க்கிலும், கோயம்புத்தூரில் கல்லூரியிலும் பயின்று வந்தார். எனது பேரனுக்கு எப்போது பள்ளிப்படிப்பை முடித்தார் என்று அவருக்குத் தெரியும் என்றால் சரிதான்.

12) தற்போது நீதிமன்றத்திற்கு எனது கணவர், எனது மருமகள் மற்றும் உறவினர்கள் வந்துள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு முட்டி ஆப்ரேஷன் செய்துள்ளதால் அவர்களும் வந்துள்ளார்கள். எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் ஜனவரி மாதம் 2020 ம் ஆண்டு கொடுத்தேன், தேதி சரியாக ஞாபகம் இல்லை. புரோநோட்டை எனது கணவர் வாங்கி வைத்திருந்தாரா அல்லது நான் வாங்கி வைத்திருந்தேனா என்றால் எனது வீட்டிற்கு எடுத்து வந்து இரு எதிரிகளும் கொடுத்தார்கள். புரோநோட்டில் என்ன என்ன வாசகங்கள் உள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

13) இந்த வழக்கில் எதிரிகள் பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த பதில் அறிவிப்பிற்கு நான் எந்தவிதமான மறு பதில்அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தோம். மேற்படி மறு பதில் அறிவிப்பை நான் கொடுத்தேனா, எனது வழக்கறிஞர் கொடுத்தாரா என்றால், எனது வழக்கறிஞர் கொடுத்தார். எதிரிகள் கொடுத்த பதில் அறிவிப்பில் புரோநோட் மற்றும் காசோலையை சான்றொப்பமிட்டு நகல் அனுப்ப சொல்லியிருந்தார்கள் என்றால் கேட்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், வழக்கிற்கு முன்பே எதிரிகள் கேட்டார்கள் என்றால் சரியல்ல.

14) நான் புகாரில் சொல்லியுள்ளவாறு எதிரிகள் என்னிடம் எந்தவித கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு இந்த வழக்கு தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் டெப்பாசிட் போட்டிருந்தேனா என்றால் போட்டிருந்தேன். அந்த டெப்பாசிட்டிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு வட்டி தரவில்லை என்றும், நான் வட்டி கேட்பதற்காக எதிரிகளின் நிறுவனத்திற்கு அடிக்கடி நான், எனது கணவர், மருமகள், பேரன் ஆகியோர் சென்று வந்தோம் என்றால் சரியல்ல, நானும், எனது பேரனும்தான் சென்றோம், மருமகளுக்கு பைனான்ஸ் எங்கு உள்ளது என்று தெரியாது.

15) நான் டெப்பாசிட் தொகைக்கு வட்டி கேட்க சென்றபோது நான் அங்கு ஆவணங்களை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. பணி ஓய்வு பெற்ற காவலரும் எங்களுடன் அந்த நிறுவனத்திற்கு வந்தார் என்றால் இல்லை, நான், எனது கணவர், எனது பேரன் தான் சென்றோம். மேற்படி காவலர்

இறந்துவிட்டார். பைனான்ஸ் நிறுவனத்தில் சி.சி.டி.வி.கேமரா உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சுற்றியுள்ள இடங்களிலும் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் இல்லை. வலுக்கட்டாயமாக நான் ஆவணங்களை எதிரிகளின் நிறுவனத்திலிருந்து எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை தப்பும், தவறுமாக பூர்த்தி செய்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட்டானது மறுபயன் அற்றதாகும், காசோலை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

16) நான் எதிரிகளின் நிறுவனத்தில் 2008-ல் டெப்பாசிட் செய்த தொகைக்கே வட்டி கொடுக்க முடியாதபோது எதிரிகளுக்கு வழக்கு கடன் தொகையை நான் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது கணவரின் தூண்டுதலின் பேரில் நான் ஒரு பொய்யான வழக்கை எதிரிகளுக்கு எதிராக தாக்கல்செய்துள்ளேன் என்றால்சரியல்ல. 1 ம் எதிரி நிறுவனத்தின் கூட்டாண்மை பத்திரத்தையோ அல்லது பதிவு சான்றிதழையோ தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கே 1 ம் எதிரி நிறுவனத்திற்காகத்தான் 2,3 எதிரிகள் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த எதிரிகள் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்

**எஸ்,டி.சி.எண். 2635/2023 நாள்- 12.04.2024 பக்கம்.120/2023**

**ம.சா.2. கோகுலகிருஷ்ணன் , த/பெ.சிவானந்தம்**

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ. நேவல் ஆர்க்டிக் படித்துள்ளேன். நான் எனது பள்ளி படிப்பை புலியூர் ராணி மெய்யம்மையில் படித்தேன் என்றால் இல்லை. கல்லூரிப்படிப்பை எங்கு படித்தேன் என்றால் AMET-ல் படித்தேன். எந்த வருடம் கல்லூரிப்படிப்பை முடித்தேன் என்றால் 2016-ம் ஆண்டு முடித்தேன். இந்த வழக்கின் வாதி சம்பூரணத்தை தெரியுமா என்றால் தெரியும். எப்படித் தெரியும் என்றால் வாதியின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்த வகையில் தெரியும். எந்த வருடத்திலிருந்து குடியிருந்தோம் என்றால் 2018-ம் ஆண்டிலிருந்து குடியிருந்தோம்.

2) என்னுடைய கல்லூரிப்படிப்பின் கல்வி சான்றிதழ்கள் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். தற்போதும் என் கைவசம்தான் உள்ளது என்றால் சரிதான். நான் கல்லூரி படிப்பை முடித்ததிலிருந்து நாளது தேதி வரை எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் நான் படித்த படிப்பிற்கான வேலைக்கு செல்லவில்லை. ஆனால் வேறு வேலைக்கு செல்கிறேன். எந்த நிறுவனத்திற்கு எப்போது சென்றேன் என்றால் கரூர் மாவட்டம், தாலுாக்கா, சின்னாண்டான்கோவிலில் உள்ள பாலாஜி இம்பெக்சிற்கு சென்றேன். எந்த வருடத்திலிருந்து சென்றேன் என்றால் 2019-ம் ஆண்டிலிருந்து சென்றேன். நாளது தேதியில் எங்கு வேலைக்கு செல்கிறேன் என்றால் 2020 முதல் 2021 வரை நிதி நிறுவனத்திற்கு வேலைக்கு சென்றேன், பின்னிட்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.

3) 2020 முதல் 2021 வரை எந்த நிதி நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன் என்றால் கரூர் டவுன் கோவை ரோட்டில் உள்ள அமர்நாத் கேப்பிட்டலில் வேலை செய்து வந்தேன். மேற்படி அமர்நாத் கேப்பிட்டலில் எனது பணி நேரம் என்ன என்றால் காலை 9 மணிமுதல் இரவு 7 மணி வரை ஆகும். எனக்கு அங்கு வருகைப்பதிவேடு உள்ளது என்றால் உள்ளது. அமர்நாத் கேப்பிட்டல் நிறுவனம் அமைந்துள்ள கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிறுவனத் அமைந்துள்ள கட்டிடத்தில் கேமரா உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு பிராமிசரி நோட்டு மறுபயன் அற்றது என்றால் சரியல்ல.

4) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பற்றிய விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி எதிரிகள் வாதியிடமிருந்து எந்த கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் வாதி குடும்பத்திற்கு வேண்டப்பட்டவர் என்றும், அவரால் நான் பலன் அடைந்தவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டில் நான் வாடகைக்கு இருந்ததால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ராஜேந்திரன் என்பவரை தெரியாது என்றால் தெரியும். அவர் சரண்குமாரின் தாத்தாவுடன் பைனான்ஸ் வசூலுக்கு செல்வார் என்றால் எனக்குத் தெரியாது. திருமலைராஜன் என்பவரை எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதியால் பலன் அடைந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்